

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், வில்லிவாக்கம் மேற்கு பகுதி சார்பாக – நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு – சாதனை விளக்க பொதுக்கூட்டம் – இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக்கு அமைச்சர் மற்றும் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் வில்லிவாக்கம் மேற்கு பகுதி செயலாளர் கூ.பீ.ஜெயின் அவர்கள் தலைமையில் சென்னை, வில்லிவாக்கம் பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது. சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் போர் முரசு கதிரவன், கழகத் தலைவர்– தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நான்கு ஆண்டு சாதனைகளை விளக்கி பேசினார். இக்கூட்டத்தில் சட்ட மன்ற உறுப்பினர் வெற்றி அழகன், பகுதி செயலாளர் வே.வாசு, லதா வாசு எம்.சி, டி.வி.செம்மொழி.எம்.சி, லதா வாசு எம்.சி, சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன் எம்.சி, வானவில் விஜய், வில்லிவாக்கம் கிழக்கு – மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: சிட்கோ சேகர், ஆர்.தீனதயான், க.சுகுமாரன், மா.அகிலன், ஜானி(எ)உமாசங்கர், சொ.முருகேசன், ப.லோகுபாபு எ.வேதா, சீ.விக்னேஷ், ச.மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, மற்றும் கழக செயல்வீரர்கள் முன்னோடிகள் திரளாக கலந்து கொண்டனர்.

## இந்து சமய அறநிலையத்துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் –

# வளர்ச்சித் திட்டப் பணிகளை ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடித்திடுவீர்!

### அமைச்சர் பி. கே.சேகர்பாபு அலுவலர்களுக்கு அறிவுரை!

சென்னை, மே 15 -

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (14.05.2025) சென்னை, கொளத்தூரில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் கொளத்தூரில் மூத்த குடிமக்கள் இல்லம் அமையவுள்ள இடம், கீழ்ப்பாக்கம், ஏகாம்பரநாதர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் ரூ.11.15 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் மற்றும் கொளத்தூர் பூம்புகார் நகரில் ரூ.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் புதிய கல்லூரி கட்டடம் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடிக்க அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

இந்து சமய அறநிலையத்துறையானது தனது நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் குடமுழுக்கு நடத்துதல், திருக்கோயில் சொத்துகளை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல் போன்ற பணிகளோடு கல்வி சார்ந்த அறப்பணிகளையும் சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது.

சென்னை, கீழ்ப்பாக்கத்தில் உள்ள காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் தற்போது 1,035 மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளியின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடும் வகையில் கடந்தாண்டு ரூ.1.78 கோடி செலவில் பள்ளி கட்டிடங்கள் மராமத்து செய்யப்பட்டு புதுப்பிக்கப் பட்டன. மேலும், இப்பள்ளிக்கு கூடுதலாக ரூ.11.15 கோடி மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களுடன் 32 வகுப்பறைகள், ஆசிரியர்கள் ஓய்வறைகள், 5 ஆய்வகங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

மயிலாப்பூர், கபாலீசுவரர் திருக்கோயில் சார்பில் கொளத்தூரில் கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இக்கல்லூரிக்கு ரூ.25 கோடி மதிப்பீட்டில் புதிய கல்லூரி கட்டடம் கட்டுவதற்கு கடந்த 23.12.2024 அன்று அடிக்கல் நாட்டினார்கள். வரும் கல்வியாண்டில் கல்லூரி வகுப்புகள் புதிய கட்டடத்தில் நடைபெறும் வகையில் கட்டுமானப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (14.05.2025) திருக்கோயில்கள் சார்பில் கட்டப்பட்டு வரும் மூத்த குடிமக்கள் இல்லம், பள்ளி கூடுதல் வகுப்பறை கட்டடங்கள், கல்லூரி புதிய கட்டடம் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடிக்க சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கும், பொறியாளர் களுக்கும் அறிவுரைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி. என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் திருமதி சி. ஹரிப்ரியா, இணை ஆணையர்கள் திருமதி ஜ.முல்லை, திருமதி பெ.க.கவெனிதா, மாநகராட்சி மண்டல குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ் குமார், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி மண்டல அலுவலர்கள் மற்றும் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியத்தில் 2025 – 2026 ஆம் ஆண்டு கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் மூலம் 22.75 கோடி ரூபாய் மதிப்பில் 650 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான பணி ஆணைகளை மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. பயனாளிகளுக்கு வழங்கினார். உடன் ஒன்றியக் குழு பெருந்தலைவர் ஹேமலதா ஞானசேகரன், ஒன்றிய செயலாளர்கள் கெ.ஞானசேகரன், டி.குமார், பேரூர் செயலாளர் பாரிவள்ளல், பேரூராட்சி தலைவர் சசிகுமார், உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆ.பாலு (எ) திராவிட பாலு
### மே 15 (2013)



இளமைக் காலம் முதற்கொண்டு திராவிட இயக்கத்தில் பற்று கொண்டு திருவள்ளூர் மாவட்டம், கன்னிகைப்பேர் கிளைச் செயலாளராகவும், மாவட்டப் பிரதிநிதியாகவும், இருமுறை எல்லாபுரம் ஒன்றியச் செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும், மூன்று முறை கன்னிகைப்பேர் ஊராட்சி மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற பணியாற்றியவர்.

மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு மூன்றுமாத காலம் சிறைவாசம் அனுபவித்தவர். மேலும் கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



சென்னை தெற்கு மாவட்ட இலக்கிய அணி சார்பில் மாவட்ட துணை அமைப்பாளர் ந.நீலகண்டன் தலைமையில் கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி, மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் 4 ஆண்டு சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினர். இக்கூட்டத்தில் மாநில தேர்தல் பணிக்குழு செயலாளர்,வேளச்சேரி.பெ.மணிமாறன், எம்.சி. ,பகுதி கழக செயலாளர் அரிமா.சுசேகர், எஸ்.பாஸ்கரன் எம்.சி., வே.ஆனந்தம் எம்.சி., ,மு.மகேஷ்வரி எம்.சி, எம்.எஸ்..ஹரிபாபு, மாவட்ட இலக்கிய அணி,அமைப்பாளர் மா.பார்த்திபன், வழக்குரைஞர் த.ஜெகதீசன், வட்ட கழக செயலாளர் வி.சக்திவேல் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் திரளான பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

## சேலம் மேற்கு மாவட்டம்

# கொங்கணாபுரம் வடக்கு, கொங்கணாபுரம் தெற்கு - மகுடஞ்சாவடி தெற்கு, மகுடஞ்சாவடி வடக்கு - நங்கவள்ளி வடக்கு, நங்கவள்ளி மத்திய, நங்கவள்ளி தெற்கு - எடப்பாடி கிழக்கு, எடப்பாடி மேற்கு - மேச்சேரி மேற்கு, மேச்சேரி கிழக்கு - சங்ககிரி மேற்கு, சங்ககிரி கிழக்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் மற்றும் ஒன்றியக் கழக பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் - அமைப்பு ரீதியான சீரமைப்புகளை மாண்புமிகு கழகத் தலைவருக்கும் - தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் **தலைவர்** அவர்கள் அமைத்த **“தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு”** ஆலோசித்து எடுத்த முடிவின்படி,

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் சேலம் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி, நங்கவள்ளி, எடப்பாடி, மேச்சேரி, சங்ககிரி ஆகிய ஆறு ஒன்றியங்கள், **கொங்கணாபுரம் வடக்கு, கொங்கணாபுரம் தெற்கு – மகுடஞ்சாவடி தெற்கு, மகுடஞ்சாவடி வடக்கு – நங்கவள்ளி வடக்கு, நங்கவள்ளி மத்திய, நங்கவள்ளி தெற்கு – எடப்பாடி கிழக்கு, எடப்பாடி மேற்கு – மேச்சேரி மேற்கு, மேச்சேரி கிழக்கு – சங்ககிரி மேற்கு, சங்ககிரி கிழக்கு** ஆகிய 13 ஒன்றியக் கழகங்களாக பிரிக்கப்பட்டு, அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்களுக்கு கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **கொங்கணாபுரம் வடக்கு, கொங்கணாபுரம் தெற்கு – மகுடஞ்சாவடி தெற்கு, மகுடஞ்சாவடி வடக்கு – நங்கவள்ளி வடக்கு, நங்கவள்ளி மத்திய, நங்கவள்ளி தெற்கு – எடப்பாடி கிழக்கு, எடப்பாடி மேற்கு – மேச்சேரி மேற்கு, மேச்சேரி கிழக்கு – சங்ககிரி மேற்கு, சங்ககிரி கிழக்கு** ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் மற்றும் பேரூர்கள் கொண்டதாக அமையும்.

**கொங்கணாபுரம் வடக்கு ஒன்றியம்:** 1. சமுத்திரம், 2. வெள்ளாளபுரம், 3. கோணசமுத்திரம், 4. புதுப்பாளையம், 5. கோரணம்பட்டி ஆகிய 5 ஊராட்சிகள்.

**கொங்கணாபுரம் தெற்கு ஒன்றியம் :** 1. கச்சுப்பள்ளி, 2.எருமைப்பட்டி, 3. குரும்பப்பட்டி, 4. தங்காயூர் ஆகிய 4 ஊராட்சிகள் மற்றும் கொங்கணாபுரம் பேரூராட்சி.

**மகுடஞ்சாவடி தெற்கு ஒன்றியம் :** 1. மகுடஞ்சாவடி, 2. கனககிரி, 3. கண்டர்குலமாணிக்கம், 4. கூடலூர், 5.காளிகவுண்டன்பாளையம், 6. வைகுந்தம் ஆகிய 6 ஊராட்சிகள்.

**மகுடஞ்சாவடி வடக்கு ஒன்றியம் :** 1. அ.புதூர், 2. கன்னந்தேரி, 3.அ.தாழையூர், 4. ஏகாபுரம், 5. தப்பக்குட்டை, 6. நடுவனேரி, ஆகிய 6 ஊராட்சிகள்.

**நங்கவள்ளி வடக்கு ஒன்றியம் :** 1. கோனூர் ஊராட்சி மற்றும் 1. பி.என். பட்டி பேரூராட்சி, 2. வீரக்கல்புதூர் பேரூராட்சி ஆகிய 2 பேரூராட்சிகள்.

**நங்கவள்ளி மத்திய ஒன்றியம் :** 1. வீரக்கல், 2. சாணாரப்பட்டி, 3. பெரியசோரகை, 4. சின்ன சோரகை ஆகிய 4 ஊராட்சிகள் மற்றும் 1. நங்கவள்ளி பேரூராட்சி, 2. வனவாசி பேரூராட்சிஆகிய 2 பேரூராட்சிகள்.

**நங்கவள்ளி தெற்கு ஒன்றியம் :** 1. சூரப்பள்ளி, 2. ஆவடத்தூர், 3.தோரமங்கலம், 4. கரிக்காப்பட்டி ஆகிய 4 ஊராட்சிகள் மற்றும் ஜலகண்டபுரம் பேரூராட்சி.

**எடப்பாடி கிழக்கு ஒன்றியம் :** 1. ஆவணிப்பேரூர் கீழ்முகம், 2.தாதாபுரம், 3. வேம்பனேரி, 4. இருப்பாளி, 5. ஆடையூர், 6.பக்கநாடு ஆகிய 6 ஊராட்சிகள்.

**எடப்பாடி மேற்கு ஒன்றியம் :** 1. நெடுங்குளம், 2. வெள்ளரிவெள்ளி, 3. சித்தூர், 4. செட்டிமாங்குறிஞ்சி ஆகிய 4 ஊராட்சிகள் மற்றும் பூலாம்பட்டி பேரூர்.

**மேச்சேரி மேற்கு ஒன்றியம் :** 1. கூணான்டியூர், 2. பள்ளிப்பட்டி, 3.மல்லிகுந்தம், 4. பொட்டனேரி, 5. எம். காளிப்பட்டி, 6.தெத்திகிரிப்பட்டி, 7. வெள்ளார் ஆகிய 7 ஊராட்சிகள் மற்றும் மேச்சேரி பேரூர்.

**மேச்சேரி கிழக்கு ஒன்றியம் :** 1. அமரம், 2. புக்கம்பட்டி, 3.அரங்கனூர், 4. சாத்தப்பாடி, 5. ஓலைப்பட்டி, 6. எம். என். பட்டி, 7.பாணாபுரம், 8. கொப்பம்பட்டி, 9. குட்டப்பட்டி, 10. விருதாசம்பட்டி ஆகிய 10 ஊராட்சிகள்.

**சங்ககிரி மேற்கு ஒன்றியம் :** 1. கோனேரிப்பட்டி அக்ரஹாரம், 2.கோனேரிப்பட்டி, 3. காவேரிப்பட்டி, 4. காவேரிப்பட்டி அக்ரஹாரம், 5. புள்ளகவுண்டம்பட்டி, 6. புள்ளகவுண்டம்பட்டி அக்ரஹாரம், 7.கத்தேரி, 8. ஆலத்தூர் ஆகிய 8 ஊராட்சிகள் மற்றும் 1. தேவூர் பேரூராட்சி, 2. அரசிராமணி ஆகிய 2 பேரூர்கள்.

**சங்ககிரி கிழக்கு ஒன்றியம் :** 1. மொத்தையனூர், 2.வீராச்சிபாளையம் அக்ஹரகாரம், 3. சின்னாகவுண்டனூர், 4.தேவண்ணகவுண்டனூர், 5. ஒலக்க சின்னானூர், 6. ஐவேலி, 7.கோட்டவருதம்பட்டி, 8. சுங்குடி வருதம்பட்டி, 9. இருகாலூர், 10.வடுகப்பட்டி, 11. அன்னதானப்பட்டி, 12. சன்னியாசிப்பட்டி அக்ஹரகாரம், 13. மோரூர் கிழக்கு, 14. மோரூர் மேற்கு, 15.இ.புதுப்பாளையம், ஆகிய 15 ஊராட்சிகள் மற்றும் சங்ககிரி பேரூர்.

**ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட கொங்கணாபுரம் வடக்கு, கொங்கணாபுரம் தெற்கு – மகுடஞ்சாவடி தெற்கு, மகுடஞ்சாவடி வடக்கு – நங்கவள்ளி வடக்கு, நங்கவள்ளி மத்திய, நங்கவள்ளி தெற்கு – எடப்பாடி கிழக்கு, எடப்பாடி மேற்கு – மேச்சேரி மேற்கு, மேச்சேரி கிழக்கு – சங்ககிரி மேற்கு, சங்ககிரி கிழக்குஆகிய ஒன்றியங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**கொங்கணாபுரம் வடக்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **மு. டாடா,** கொங்கணாபுரம், சேலம் மாவட்டம்.
**கொங்கணாபுரம் தெற்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **பரமசிவம்,** கொங்கணாபுரம், சேலம் மாவட்டம்.
**மகுடஞ்சாவடி தெற்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **க. அன்பழகன்**, மகுடஞ்சாவடி,சேலம் மாவட்டம்.
**மகுடஞ்சவாடி வடக்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **க. பச்சமுத்து**, மகுடஞ்சாவடி, சேலம் மாவட்டம்.
**நங்கவள்ளி வடக்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **ரா. அர்த்தனாரி ஈஸ்வரன்**, நங்கவள்ளி, சேலம் மாவட்டம்..
**நங்கவள்ளி மத்திய ஒன்றியம்:** பொறுப்பாளர் : **சா.நல்லபிரபு**, நங்கவள்ளி, சேலம் மாவட்டம்.
**நங்கவள்ளி தெற்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **கே.வி. ராஜூ**, நங்கவள்ளி, சேலம் மாவட்டம்.
**எடப்பாடி கிழக்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **சீ. பூவா,** எடப்பாடி, சேலம் மாவட்டம்.
**எடப்பாடி மேற்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **கே.என்.பி.நல்லதம்பி,** எடப்பாடி, சேலம் மாவட்டம்.
**மேச்சேரி மேற்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **காசி விஸ்வநாதன்,** மேச்சேரி, சேலம் மாவட்டம்..
**மேச்சேரி கிழக்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **எஸ். சீனிவாசபெருமாள்,** மேச்சேரி, சேலம் மாவட்டம்..
**சங்ககிரி மேற்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **சுப்பிரமணி,** சங்ககிரி, சேலம் மாவட்டம்.
**சங்ககிரி கிழக்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **கே.எம்.ராஜேஸ்,** சங்ககிரி, சேலம் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 14.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



மேயர் ஆர்.பிரியா, நேற்று (14.05.2025) 2024–25ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் சென்னை பள்ளிகளில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற நுங்கம்பாக்கம் சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியின் தலைமையாசிரியர் ஜி.கிரிஜா மற்றும் ஆசிரியர்களை ரிப்பன் கட்டட அலுவலகத்தில் நேரில் சந்தித்து பாராட்டுகளைத் தெரிவித்து, பள்ளி கல்வி வளர்ச்சி நிதியாக ரூ.1 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு. மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ.விஜயா ராணி, மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர் (கல்வி) பாலவாக்கம் த.விசுவாதன் மற்றும் கல்வி அலுவலர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.